# தமிழ் வளர்ச்சியில் சைவத்தின் பங்கு

முனைவர் கு . சுந்தரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்.

43

உலகில் உள்ள ஒவ்வொரு சமயமும் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே தோன்றியுள்ளன. உலகில் பல்வேறு சமயங்கள் காணப்படுகின்ற போதிலும் சைவ சமயம் மிகவும் தொன்மையானதும், சிறப்பு வாய்ந்ததுமாகும். அன்பே சிவம் என்பதுவே சைவ சமயத்தின் தாரக மந்திரம் ஆகும். அதன் அடிப்படையில் சைவம், சாதி வேற்றுமை, தீண்டாமை ஆகியவற்றிற்கு இடம் தரவில்லை. ஒரு மொழியை வளப்படுத்தும் திறமை,ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழி வளம் பெறும்போது சிந்தனையும், அறிவும் வளம் பெறும். தெளிவான அடையாளங்களுடன், சைவமானது முழுமையான ஒரு மதமாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டது.

**சைவ சமயம்**

உலகில் தோன்றி நிலைபெற்றுக் கொண்டிருக்க கூடிய பல்வேறு சமயங்களில் மிகவும் பழமையான ஒரு சமயமாகவே இந்து சமயம் காணப்படுகின்றது. இந்து சமயமானது இரு பிரிவுகளை கொண்டு அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் சிவன் வழிப்பாட்டு பிரிவு சைவம் எனவும், திருமால் வழிப்பாட்டு பிரிவு வைணவம் எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்விரண்டிலும் சைவ சமயமே காலத்தால் முற்பட்டது. சைவ சமயமும் தனிப்பெறும் சமயமாக விளங்கி, மனித வாழ்வினை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

சிவபெருமானாகிய இறைவனை, உயிர்கள் சென்றடைந்து வழிப்பட்டால், ஆணவம், கன்மம், மாயை நீக்கப்பட்டு, பேரின்ப வாழ்வினை அடையலாம் என எடுத்துக் கூறுகின்றது. இறைவனை வழிப்பாடு செய்வதன் மூலம் உடலும் உள்ளமும், தூய்மை பெற்று தூய்மையான ஒழுக்கம் சார்ந்த வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்க முடிகின்றது.

சைவ சமயம் சற்று நிலைகுன்றிய நிலையில் இருந்தபோது அருளாளர்கள் தோன்றி ஆதீனங்கள் மூலம் சமயத்தை காத்தனர். புராணங்கள் பதினெட்டு, சித்தர்கள் பதினெட்டு போன்று சைவ ஆதீனங்கள் பதினெட்டு ஆகும். இவற்றைச் சுத்த சைவ பதினெட்டு ஆதீனங்கள் என்றும் கூறுவர். இவற்றில் முதலில் தோன்றியது திருவாவடுதுறை ஆதீனம், அடுத்துத் தோன்றியது தருமபுர ஆதீனம் ஆகும். புத்தொன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் இந்து மதத்திற்கு சுவாமி விவேகானந்தர் மூலம் இளம் ரத்தம் செலுத்தப்பெற்றது.

**சைவ சமயத்தின் பழமை**

சைவ சமயத்தில் பழமையை எடுத்துக்காட்டுவதாகவே சங்ககால இலக்கியங்களில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,

பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் போன்றவற்றுள் சிவனைப் பற்றிய செய்திகள் இருப்பதனை காணலாம்.

“பிறைநுதல் பொழிந்த சென்னி நீலமணி மிடற்று ஒருவன்”

என புறநானூறிலும்

“பிறவா யாக்கை பெரியோன் கோவிலும்”

என சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளமையை காணலாம். மேலும் சிந்துவெளி அகழ்வாராய்ச்சியின் போது சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டமை சைவ சமயத்தின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது. இன்றைக்கு உலக அளவில் பரவியுள்ள சைவ சமயத்தின் முதல் விதையைத் தேடிப் பயணிப்பது என்பது பல்வேறு யுகங்கள், நாகரிங்கள் கடந்த முயற்சியாகும். இம்முயற்சியில் எழுத்துச் சான்றுகள், புதைப்பொருள் சான்றுகள், பண்பாட்டு சான்றுகள் போன்றவற்றையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

**தமிழ்மொழி**

சைவம் சமயம் எவ்வாறு பழமையானது அதுபோலவே மொழிகள் மிகவும் பழமையான ஒரு மொழியாகவே தமிழ்மொழி காணப்படுகின்றது. அதாவது மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியின் போது தமிழ் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டமை அதன் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது. சமயத்தின் சிந்தனைகள், கருத்துக்கள், கொள்கைகள் போன்றவற்றை பரப்புவதற்கு ஊடகமாக மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் சைவ சமயத்தின் கொள்கைகளையும், சிந்தனைகளையும் பரப்புவதில் தமிழ்மொழி செல்வாக்கு செலுத்தியுள்ளது.

இறைவன் அன்பு வடிவமாக இருப்பதை அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே எனத் திருமூலர் உணர்த்தியுள்ளார். தேவேந்திரன் தேவர்களின் தலைவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் செய்யும் நல்வினை பயனாகக் கிடைப்பது தேவர் உலகமாகும். தேவலோகத்தின் தலைவன் இந்திரன். தலைவர் பதவியைப் பெறுவதற்கு நூறு பரிவேள்வி செய்து முடிக்க வேண்டும். அதாவது சைவ சமயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. அதாவது சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு தமிழ் மொழி உறுதுணையாக இருந்துள்ளது.

“கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி”

என்கிற சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு. சமணம் எந்த இசையை வெறுத்ததோ அந்த இசையை அடிப்படையைக் கொண்டே சமயக் குரவர்கள் சைவத்தை தமிழகம் முழுவதும் பரப்பத் தொடங்கினார். அதனாலேயே சைவம் எளிய முறையில் மக்களிடம் சென்றது.

சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக தொண்டாற்றிய பலரும் தமிழ் மொழியில் தங்களுடைய கருத்துக்களை முன் வைத்துள்ளமையை காணலாம். அந்த வகையில் சுந்தரர்

“இறைவன் தமிழை ஒத்தவன்”

என்றும், நம்பியாண்டார் நம்பி

“தோடோடு செவியன்”

என்றும், திருநாவுக்கரசர்

"பித்தா பிறைசூடி பெருமானே",

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"

என்றும், பத்தாம் திருமுறையான திருமூலரின் திருமந்திரம் தமிழகத்தில் நிலவும் சித்தாந்த சைவம் மட்டுமின்றி, வேறு சில சைவ உட்பிரிவுகளின் தத்துவக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டது. மற்றும் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்

"ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்"

என்றும் போன்ற அனைத்துமே சிவபெருமானின் மகிமைகளை எடுத்துக் கூறும் தமிழ் பாடல்களாகும்.

தமிழில் சைவ சமயத்தின் தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் வரை உள்ள சமயக்குரவர்கள் ஆவர். அவை பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப் பெற்று தொகுக்கப் பெற்றன. பன்னிரு திருமுறைகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு பெருமையுடையது. அவற்றிலிருந்தே பக்தி இலக்கியங்கள் தோன்றுகின்றன. அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்ந்து கீர்த்தனை வரையில் வளர்கின்றன.

சந்தக் கவிக்கு வித்திட்டவர் ஞானசம்பந்தப்பிள்ளை என்றால் அதை தமது திருப்புகழ் பாக்களால் அடுத்த கட்டத்திற்கு சென்றவர் அருணகிரி பெருமான். திருவாசகத்தைப் போன்று, குட்டித் திருவாசகம் எனப்படும் வரதுங்க ராம பாண்டியர் இயற்றிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தாந்தாதி. தாயுமானவரின் பாடல்கள், அதன் தொடர்ச்சியாக வந்த குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் அனைத்துமே அன்னைத் தமிழுக்குக் கிடைத்த அணிகளாகும். தேவாரத் திருப்பதிகங்களைப் போன்று வள்ளல் ராமலிங்கப் பெருமான் எண்ணற்ற பாடல்களைப் பாடினார். அவரைப் போன்று பாம்பன் சுவாமிகளும் பல்லாயிரக்கணக்கான பாடல்களால் முருகப் பெருமானைத் துதித்துள்ளார்.

**தமிழில் சிவபெருமானின் பதிவுகள்**

சங்க இலக்கியத்தில் சைவ சமயத்தின் தலைவனான சிவபெருமானின் பெயர் ஒரு இடத்தில் கூட சிவன் என்ற பெயர் பதிவிடவில்லை. சிவனின் மற்றொரு சொற்களான ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈஞ்சடை அந்தணன், காலக் கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி ஆலிலை பாகத்து ஒருவன், மணிமிடற்றான், முக்கட்செல்வன் என்றப் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. தன் திருமேனிக்கு உரிய பெயர்களுடனும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளான். வுழிப்பாட்டில் அவனுக்கென்று தனியே கோவில் அமைத்து வழிப்படும் வழக்கமும், ஊருக்கு நடுவே மன்றங்கள் அமைத்து வழிப்படும் வழக்கமும் இருந்தமை சங்க இலக்கியங்களில் வழி அறியமுடிகின்றது.

"நீல மேனி வாலிலை பாகத்து
ஒருவன் இரு தாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன் முறையே"

என ஐங்குறுநூறிலும்,

"ஆறு அறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து,
தேறு நீர் சடைக் கரந்து, திரிபுரம் தீ மடுத்து"

எனக் கலித்தொகையிலும்,

"ஊர்ந்தது ஏறே: சேர்ந்தோள் உமையே
சேவ்வான் அன்ன மேனி"

என அகநானூறிலும்,

"கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே"

எனப் புறநானூறிலும், இவ்வாறு தொகை நூல்கள் நான்கிலும் கடவுள் வாழத்து பாடல்கள் சிவபெருமானைப் பற்றியதாகும். இப்பாடல்களில் சிவபெருமானுடைய வடிவங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. ஐங்குநூற்றில் உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்ட நீலநிறம் வாய்ந்த திருமேனியை உடையவன் எனவும்;, அகநானூற்றுப் பாடலில் சிகப்பு நிறைந்த மேனியை உடையவன், நெற்றியில் இமைக்காத கண்கள் உடையவன் எனவும் குறிக்கப்பெறுகிறது. உருவ வழிப்பாடுகளைக் கூறுவதோடு சிவபெருமானுடைய புராணச் செய்திகளும் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

சிவபெருமானுக்கு திருவாதிரை நாள் சிறப்புடையதாகக் கருதப்பட்டது. அத்திருநாளில் சிவபெருமானுக்கு விழாக்கள் எடுத்தல் பற்றியும், எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. அதிலும் மார்கழித் திருவாதிரை நாள் சிறப்புடைய திருநாளாக் கருதப்பட்டது. இதனைப் பரிபாடல் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

"வெள்ளேறு
வலைவயின் உயரிய பலர் புகழ் திணித்தோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்"

எனத் திருமுருகாற்றுப்படையில் வெண்மையான எருதின் மேல் எல்லோரும் போற்றும் உமையம்மையோடு அமர்ந்து, இமைக்காத கண்களையுடையனும், மூன்று கோட்டைகளை கொளுத்திய சினம் மிகுந்த செல்வன் எனச் சொல்லப்பட்டுள்ளது.

ஒருவனே தேவன் எனவும் தோற்றமில்லாத காலத்தவன், மூவகை வடிவானவன், எண்குணத்தன், ஐந்தொழிலைப் புரிபவன், எண்வகை வடிவானவன், அம்மையப்பராக இருந்து அருள் புரிபவன், இறைவன் ஒருவனேயானவன், அவனே சிவபெருமானாகவும், அனைத்து உயிர்களுக்கும் தலைவனாகவும் விளங்குகிறான். நீக்கமற நிறைந்திருப்பவன், உயிர்கள் தம் அன்பினால் அனைத்துக் கொண்டிருப்பவன். தோற்றமும் முடிவும் இல்லாதவன். உயிர்கள் நிலைப்பெறுவதற்கு அவற்றுடன் ஒன்றாகவும், அவை அழிவதற்கு வேறாகவும், அவை இயங்குவதற்கு உடனிருந்து அருள்பவன். என சிவபெருமானின் இயல்புகளை சைவசித்தாந்தம் கூறுகின்றது.

சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் திருமந்திரம் பதி, பசு, பாசம் என்னும் மூன்றை வலியுறுத்துகிறது.

“பதிபசு எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே”

ஆன்மாவைப் பசுவாகவும், இறைவனைப் பதியாகவும், அவனை அடைவதற்குப் பாசத்தை விடுவதுவும் என இத்தத்துவ விளக்கம், தமிழ்நாட்டில் சைவ சமயம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருத்தொண்டினால் புத்துயிர் பெற்று நன்கு வளர்ந்தது.

நிலம், நீர். நெருப்பு, காற்று, ஆகாயம், உயிர், ஞாயிறு, திங்கள் என்னும் வடிவங்களை உடையவன் சிவபெருமான். இறைவன் உயிர்களைப் படைதடதல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறான் எனக் கூறுகின்றனர்.

சைவ சமய கருத்துக்களை தமிழ்மொழியில் சான்றோர்கள் பரப்பியதால் சிவ பக்தியோடு இணைந்து தமிழ்மொழியும் வளர்ச்சிபெற்றது. இந்து மதத்தின் உயிர்நாடியாக சைவ சமயம் விளங்குவது போல சைவ சமயத்தின் உயிர்நாடியாக தமிழ்மொழி விளங்குகின்றது. எனவே சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்த தொடர்பு கொண்டவை.

**பார்வை நூல்கள்**

1.பாலசுப்பிரமணியன்.சி.டாக்டர்., சங்க இலக்கியம்-சில பார்வைகள் -நறுமலர்ப் பதிப்பகம்,சென்னை.
2.நடராசன்.பி.ர., பதினொராந் திருமுறை., -உமா பதிப்பகம்,மண்ணடி,சென்னை.
3.சுப்புரெட்டியா.ந., சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்., திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,சென்னை.